# 'சட்'டென ஓர் கிறுக்கல்



--- ஜெயசேகரன் ஜென்

தொகுப்பு: அனுத்தமா

*’சட்’டென ஓர் கிறுக்கல் : 001*

*ஆட்கள் வாகனங்கள் அற்ற*
*சுதந்திர சாலையில்*
*விதிமுறைகளை*
*பின்பற்றும் என்னை*
*ரசிக்கும் நான் !*

*சட்டென ஒரு கிறுக்கல் : 002*

*அந்த மூன்று*
*எழுத்துக்களை*
*நான் அச்சில்*
*விரல் கோர்க்குமுன்*
*உன் பெயர்*
*என் செல்லக் கணினியில்*
*வந்து சேரும் அதிசயம் !*

*சட்டென ஒரு கிறுக்கல் : 003*

*ஏதோ ஒரு*
*கதாநாயகன் நாயகி*
*பேசும் ஒரு வரியில்*
*அந்த இருவரும் விலகி*
*நீயும் நானும்*
*வெண் திரை முழுவதுமாய் ... !*

*சட்டென ஒரு கிறுக்கல் : 004*

*காற்றில் பறக்கும்*
*புத்தகப்பக்கங்களில்*
*நான் படித்த பக்கம்*
*மட்டும் தனியே தெரியும்*
*பார்வை அதிசயம் !*

*சட்டென ஒரு கிறுக்கல் : 005*

*அந்த நெருஞ்சி முள்*
*எடுத்த பின்னும்*
*என்னை பார்த்து*
*சிரித்தது ….*
*என் இரத்தத்துடன்!*

*சட்டென ஓர் கிறுக்கல் : 006*

*மழை நிற்கவில்லை*
*மனிதர்கள் நின்று…*
*மின்சாரம் நின்று ..*
*இயக்கம் முடங்கி…*
*இயற்கை நகர*
*ஆரம்பித்தால்*
*நாம் ஒன்றுமில்லை !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 007*

*நான் இல்லா நேரத்திலும்*
*கண்ணாடி அதன் வேலையை*
*செய்துகொண்டே இருக்கிறது ...*
*இருப்பவை எல்லாம்*
*எனக்காகவே அல்ல !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 008*

*வெளியே வானம்*
*மேகத்தின் ஊட்டத்துடன்*
*உள்ளே நான்*
*மனசாட்சியின் முனகல்களுடன் ...*
*வா வெளியே என்ற*
*முனகல் சத்தம் மட்டும் தனியே !*

*சட்டென ஓர் கவிதை :009*

*ஒவ்வொரு பக்கமாய்*
*புத்தகம் எனக்குள்*
*வலம் வருகிறது ...*
*மீண்டும் மீண்டும் நான்*
*’கற்றுக்கொள்ள வேண்டியது*
*நிறைய இருக்கிறது’*
*என்கிற நினைப்பிற்குள்*
*நகர்கிறேன் !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 010*

*தவறி விழுந்து உருண்ட*
*நாணயத்தை எடுத்து கொடுத்த*
*சிறு குழந்தைக்கு*
*நன்றி சொன்ன போது*
*புரியாது சிரித்தது*
*இன்றைய அழகு !*

*சட்டென ஓர் கிறுக்கல் :011*

*காயத்தின் ஆய்ச்சலில்*
*உடல் நிலை*
*தடுமாறும்போது வரும்*
*உளமார்ந்த விசாரிப்புகள்*
*சொல்கின்றன நாம்*
*என்ன சம்பாதிக்கிறோம் என்று !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 012*

*எட்டு புள்ளி*
*எட்டு வரிசையில்*
*யாரோ வரைந்த ஓவியம்*
*என் கண் காட்சியின்*
*வரைந்தவர் தெரியா*
*முதல் கவிதை இன்று !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 013*

*பிரிக்கப்பட்ட*
*உதிரிப்பூக்கள் நாரைக்*
*கட்டிக்கொள்வதெல்லாம்*
*கள்ள மனதின் திறமைகள் ...*
*காம்போடு அவைகள்*
*இயற்கையாய் இருப்பதில்*
*உங்களின் பிரச்சினை என்ன ?*

*சட்டென ஓர் கிறுக்கல் : 014*

*தொடரும் மழை*
*குளிரும் தரை ...*
*இப்போது புரிகிறது*
*ஏன் காணாமல் போகின்றன*
*இந்த எறும்புகள் என்று ...*
*என்ன ஒரு சாமர்த்தியம் ?!*

*சட்டென ஓர் கிறுக்கல் : 015*

*மார்பு குளிரும்*
*மழைத்துளியின்*
*மெத்தென்ற அடியில்*
*மெதுவாக மொத்தமாக*
*நனைந்த நானும் அதே*
*நடு மார்பில் வாழும்*
*நம் கடந்த கால நினைவுகளும்*
*நலமே !*

சட்டென ஓர் கிறுக்கல் : 016

எங்கோ கடலில்
பெய்யும் பெரு மழையும்
அதன் இடி சத்தமும்
கரையில் நிற்கும் என்னை
கொஞ்சமும் பயமுறுத்தவில்லை ...
ஏன் ?
தூரங்கள் பாதிப்பு
ஏற்படாது பார்த்துக்கொள்ளுமோ ??

சட்டென ஓர் கிறுக்கல் : 017

மீண்டும் மீண்டும்
என்னை தொட வரும் அலை..
கடலின் அந்தப்பக்கம்
நீ நிற்பது புரிகிறது ...
நமக்கிடையில்
அலை ஏன் என்பதுதான்
எனக்கு புரியவில்லை... !

சட்டென ஓர் கிறுக்கல் : 018

என் பாதங்களின் அலைகள்
என்னை விட்டு விலகுவதும்
மீண்டும் என்னை அடைவதும்
அழிக்கப்பட்ட பென்சில்
கவிதை போல்
கவிதை அழியலாம் அழிக்கலாம்..
அந்த காகிதப் பதிவுகள்
அழிவதே இல்லை !

சட்டென ஓர் கிறுக்கல் : 019

நினைவுகள்
அக பொக்கிஷம் ... அவை
விற்பனைக்கு அல்ல.
கைப்பற்ற முயற்சிப்பவர்கள்
வெளியேறலாம்...
பங்கேற்பவர்கள்
உடன் பயணிக்கலாம் !

சட்டென ஓர் கிறுக்கல் : 020

இரவுகளின் மௌனம்
ஏற்படுத்தும் அதிர்வுகளும்
மௌன அதிர்வுகளே ...

சத்தமின்றி சரியும் அதிர்வுகளால்
சொல்ல முடியாமல்
தவிக்கும் வலி...

அனைத்திற்கும்
காரணம் தெரியாததால்
தெரிந்து கொள்ள விரும்பாததால்
உறங்கிப்போகும் நான் !

சட்டென்று ஓர் கவிதை : 21

மண்ணுக்குள் வேரை தள்ளி
வெளியே நம்பிக்கையுடன்
வானை பார்க்கும்
அந்த படரும் செடியும்
நானும் வேறு வேறல்ல.

*சட்டென ஓர் கிறுக்கல் : 22*

*மகிழ்ச்சி வெற்றி*
*துக்கம் தோல்வி*
*யதார்த்தம் கற்பனை*
*எல்லாவற்றிலும்*
*என்னுடன் பயணிக்கும்*

*அந்த உயிரற்ற*
*அஃறினை நான்கு சக்கர*
*அகலத்தில் என்னை*
*அடகு காப்பதற்க்கு*
*ஈடு இணை இல்லை !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 23*
*தூக்கத்தில் விழுந்து,*
*என்னை தொலைத்து,*
*மெத்தையில் இருந்து எழுந்து -*
*மீண்டு(ம்)*
*கிடைத்த நான் !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 24*
*மழை*
*வரும்போது*
*எதற்கு குடை ?*
*குடையாக*
*மழையே மாற*
*தயாராகும்போது .... !*
*- இப்படிக்கு*
*மழைக்குடையில்*
*நனைந்து கொண்டிருக்கும்*
*நான்.*

*சட்டென ஓர் கிறுக்கல் : 25*

*கோவிலுக்கு*
*சென்ற பெண்ணை*
*காணோமே என்று*
*தாய் பதறிய போது ..*
*தெய்வத்திற்கு என்ன*
*ஆயிற்றோ என்று*
*பதற யாருமில்லை !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 26*

*கீழே விழுந்த*
*சில்லறைகளை*
*எடுப்பதற்கு முன்*
*சுற்றிப் பார்க்கும்*
*நீயும்*
*வெட்கமின்றி*
*அதை எடுத்து*
*தானம் செய்யும்*
*நானும்*

*வேறு வேறு !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 27*

*என் பாதைகளில்*
*பறக்கும் வண்ணத்துப்பூச்சி*
*என்னை தடுப்பதில்லை ..*
*மாறாக ..*
*ரீங்காரத்துடன்*
*என் உடன் பறக்கிறது !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 28*

*திரைக்கு அந்தப்புரம்*
*ஓர் உலகம் ...*
*அங்கு நீயும் நானும்*
*புரிதல் இடைவெளியுடன்*
*மகிழ்வாய் நடக்க*
*திரைக்கு இந்தப்புரம்*
*வகை வகையாய்*
*தரம் நிறைந்த*
*தரமற்ற கதைகள்*
*- நம்மைப்பற்றி !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 29*

*இடது கண்ணில்*
*நான் விழுந்தது*
*வலது கண்ணிற்கு*
*தெரிந்துவிடக்கூடாது*
*என்கிற பயம் உனக்கு ...*
*நானோ ...*
*நேரிடையாக*
*நேர் எதிரில்*
*நின்று பேசுகிறேன்.. !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 30*

*எங்கோ தொலைவில்*
*கேட்ட ஒரு*
*இடிச் சத்தம்*
*காரணமான நொடியில்*
*இருவரும் இணைந்த*
*சுகப் பொழுதுகள்..*
*மறக்க முடியுமா ?*

*சட்டென ஓர் கிறுக்கல் : 31*

*நடு நெஞ்சின்*
*மச்சம் சொல்கிறது*
*உன் நெற்றிப்பொட்டின்*
*சுற்றளவினை ... !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 32*

*என் வலது மார்பின்*
*மென் எல்லைகள்*
*கடந்த கால*
*நினைவுகளுடன்*
*செய்யும் வன்முறையில்*
*நான் தோற்பதில்லை !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 33*

புருவங்களுக்கு
மத்தியில்
நீள விரல்களால்
நீ வரைந்த கோலங்கள்
இன்னும் அழியாது
மௌன சாட்சியாய்
கேள்வி கேட்க
தயாராகின்றன !

*சட்டென ஓர் கிறுக்கல் : 34*

குளித்து விட்டு
காத்திருக்கும் நான் ..
யாரோ ஒருவரின்
வருகையுடன் தொடங்கும்
தலை துவட்டலுக்காக !

*சட்டென ஓர் கிறுக்கல் : 35*

தூரத்தின்
வெளிச்சப் புள்ளிகள்
அருகாமையின்
விளக்கு கம்பங்கள்
நெருங்க நெருங்க
மாற்றம் உண்மையே !

*சட்டென ஓர் கிறுக்கல் : 36*

*கொம்புத் தேனை*
*நான் படம் பிடிக்கையில்*
*என் உதடு ஏன்*
*இனிக்கிறது?*

*சட்டென ஓர் கிறுக்கல் : 37*

*மொட்டுக்கள்*
*என்று ஒன்று*
*இல்லவே இல்லை ...*
*எல்லாம் நாளைய*
*எதிர்பார்ப்பு பூக்களே !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 38*

*மூடாமல் திறந்து*
*நிற்கும் அந்த*
*ஒற்றை எழுதுகோல்*
*சொல்லும்...*
*இன்னும் எழுத வேண்டியவை*
*நிறைய இருக்கிறது என்று !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 39*

*அனைத்து*
*காலணிகளும்*
*வரிசையாய்*
*அமர்ந்திருந்தன....*
*அம்மா வந்திருக்கிறாள் !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 40*

*நீர்த்திவலைகள் தெளித்த*
*கடந்த காலப் புள்ளிகள்*
*நிறைந்த கண்ணாடி*
*உன் முகத்தை மறைத்து*
*என் முகத்தை மட்டும்*
*காட்டிக்கொள்கிறது !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 41*

*வானம் அற்ற*
*ஓர் தேசத்தில்*
*நீயும் நானும்*
*நடக்கிறோம் ...*
*தரையற்ற*
*அந்த நடையை*
*உலகம் 'பறத்தல் '*
*என்று அழைத்துக்கொள்கிறது !*

*சட்டென ஓர் கவிதை : 42*

*அந்த நிலவை*
*பிடித்து தரையில்*
*வீச வேண்டும் ...*
*நிறைய மனிதர்களின்*
*இரண்டாம் முகம்*
*அங்கிருக்கிறது !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 43*

*யாரோ இங்கே*
*அமர்ந்திருக்கவேண்டும்...*
*அந்த மனித உடல்*
*கொஞ்சம் கோபத்துடன்*
*இருந்திருக்க வேண்டும் ...*
*நான் அமர்ந்த இடம்*
*பேசும் மௌன மொழி !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 44*

*பார்க்கவேயில்லை உன்னை ...*
*ஆனால் உணர்கிறேன்*
*ஜன்னலுக்கு வெளியில்*
*பெய்யும் மழையாய் நீ !*

சட்டென ஓர் கிறுக்கல் : 45

அதெப்படி ...
அம்மா பரிமாறும்போது
நான் மௌனியாகிறேன் ?

சட்டென ஓர் கிறுக்கல் : 46

யாருமற்ற அந்த
உயர்தர தேநீர் கடையில்
அமர்ந்திருந்த
அந்த இரு இளம்பெண்கள்
தங்களின் கைக்கணினியுடன்
பேசிக்கொண்டு .... !

சட்டென ஓர் கவிதை : 47

ஒரு பக்கம் இருக்கைகள்
அதன் மறுபக்கம்
இருக்கைகளின் நிழல்கள்
அறை முழுக்க இருக்கைகள் ..
ஆட்கள் யாருமின்றி !

*சட்டென ஓர் கவிதை : 48*

*தேநீர் ஒரு மிடறு*
*Type ஒரு சில எழுத்து*
*கொஞ்சம் கெஞ்சும் சிரிப்பு*
*மீண்டும் type*
*தேநீர் ஒரு மிடறு*
*கொஞ்சம் காத்திருத்தல் ...*
*படபடப்புடன் ... இந்த தலைமுறை*
*இளம்பெண்ணின்*
*யதார்த்த அழகு !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 49*

*ஆடை முதல்*
*அத்தனையும்*
*அதி நவீனம் ...*
*ஆடவனின் விரல்*
*இறுகப் பிடித்து*
*இரண்டாம் இலக்கத்தில்*
*நடக்கும் நீ பேசும்*
*நாகரிகம் பெண்ணீயம்*
*புரியவில்லை !*

*சட்டென ஓர் கிறுக்கல் : 50*

*முன்னோர் காலத்தில்*
*மிதமாய் தொலைந்த*
*மனதொன்று மீட்கப்படுகிறது...*
*அறிவின் சங்கமம்*
*என்று ஒரு காதல் உண்டோ ?*

*********